ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொதுப்படுகடன் திணைக்களம் |
| திகதி | 2018 ஏப்பிறல் 12 |

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

## ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குகிறது.

இலங்கை மத்திய வங்கி, இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சார்பில் 5 ஆண்டுகாலத்திற்கான ஐ.அ.டொலர் 1.25 பில்லியன் கொண்ட புதிய முறிகளையும் 10 ஆண்டுகாலத்திற்கான மூத்த பிணையிடப்படாத நிலையான வீதத்தினைக் கொண்ட ஐ.அ.டொலர் 1.25 பில்லியன் முறிகளையும் முறையே 2023 ஏப்பிறல் 18ஆம் நாள் மற்றும் 2028 ஏப்பிறல் 18ஆம் நாள் முதிர்ச்சிகளுடன் வெற்றிகரமாக வழங்கியதன் மூலம் ஐ.அ.டொலர் சந்தைக்கு இலங்கை திரும்பியமையினை எடுத்துக்காட்டியது. முறிகள் மூடிஸ் இன்வெஸ்டர்ஸ் சேர்விஸ், ஸ்டான்டட் அன்ட் புவர் மற்றும் பிச் ரேடிங் என்பனவற்றினால் முறையே B1, B+ மற்றும் B+ இல் தரமிடப்பட்டுள்ளன.

இது, 2007இற்குப் பின்னர் பன்னாட்டு முறிகள் சந்தைகளில் பன்னிரண்டாவது ஐ.அ.டொலர் அடிப்படை அளவுக்குறியீட்டினை குறிப்பதாகக் காணப்படுகிறது. இது முன்னொருபோதும் இல்லாதவிதத்தில் மிகப்பெரிய கரைகடந்த முறிவழங்கலை காட்டுவதாக இருப்பதுடன் பல ஆண்டுகளாக இலங்கைக்கு பன்னாட்டு முதலீட்டாளர்கள் சமூகம் தொடர்ச்சியாக அளித்துவரும் ஆதரவை வலுவாக பிரதிபலிப்பதாகவும் காணப்படுகிறது. சிற்றிகுரூப், டியூச், எச்.எஸ்.பீ.சி, ஜே.பி மோகன் மற்றும் ஸ்டான்டட் சாட்டட் என்பன வெற்றிகரமான கொடுக்கல்வாங்கலின் கூட்டு முதன்மை முகாமையாளர்களாகவும் ஏட்டுப்பதிவாளர்களாகவும் தொழிற்படுகின்றனர்.

சவால்மிக்க சந்தைச் சூழலொன்றில் ஆதரவுமிக்க வழங்கல் துறையொன்றினை அடையாளம் காணுகின்ற விதத்தில் 2018 ஏப்பிறல் 11ஆம் நாள் ஆசியாவின் காலைப்பொழுதில் இலங்கை கொடுக்கல்வாங்கல் பற்றி அறிவித்தது. கூட்டாண்மையாளர்கள் புதிய 5 ஆண்டு மற்றும் 10 ஆண்டுத் தொகுதிகளின் முறையே 6.00 வீதம் மற்றும் 7.00 வீத நியதிகளையும் ஆரம்ப விலை வழிகாட்டலையும் வழங்கின. இக்கொடுக்கல்வாங்கல்கள் உயர்தரம் வாய்ந்த பரந்தளவிலான முதலீட்டாளர்களின் வலுவான ஈடுபாட்டினை காட்டியதுடன் இது வழங்குனர் இரண்டு தொகுதிகள் ஒவ்வொன்றுக்குமான விலை வழிகாட்டல்களை 25 அடிப்படைப் புள்ளிகளினால் இறுக்கமாக்குவதற்கு அனுமதித்தனர். இறுதியாக முறிகள் நியூயோர்க் மணித்தியாலங்களின் போது முறையே 5 ஆண்டு மற்றும் 10 ஆண்டு கால தொகுதிகளுக்கான 5.75 சதவீதம்

மற்றும் 6.75 சதவீதம் கொண்ட கூப்பன்வீதத்துடன் ஆரம்ப விலை வழிகாட்டல்களுக்குள்ளே விலையிடப்பட்டிருந்தன.

இறுதிக் கட்டளை பதிவேடுகள் ஐ.அ.டொலர் 3.0 பில்லியன்களாக அமைந்து 5 ஆண்டு தொகுதிக்கான 235+ கணக்குகளிலும் ஐ.அ.டொலர் 3.5 பில்லியன்களாக அமைந்து 10 ஆண்டு தொகுதிக்கான 190+ கணக்குகளிலும் பரந்து காணப்பட்டன. இது இலங்கை மீதும் அதன் பொருளாதார தோற்றப்பாட்டின் மீதும் முதலீட்டாளர் தொடர்ச்சியாகக் கொண்டிருந்த நம்பிக்கையினை தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

கட்டளைப் பதிவேடு இரண்டு தொகுதிகளிலும் சிறந்த முறையில் பன்முகப்படுத்தப்பட்டு காணப்படுகிறது. 5 ஆண்டு தொகுதியில் 66 சதவீதம் ஐக்கிய அமெரிக்காவிற்கும் 24 சதவீதம் ஐரோப்பாவிற்கும் எஞ்சிய 10 சதவீதம் ஆசியாவிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளமையைக் காட்டுகின்றது. முதலீட்டாளர் வகையின் படி 92 சதவீதமான பங்கினை நிதிய முகாமையாளர்களும் 5 சதவீதமான பங்கினையை காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியங்களும் 2 சதவீதத்தினை வங்கிகளும் 1 சதவீதத்தினை தனியார் வங்கிகளும் கொண்டிருந்தன. 10 ஆண்டுகாலத் தொகுதியில் 65 சதவீதம் ஐக்கிய அமெரிக்காவிற்கும் 29 சதவீதம் ஐரோப்பாவிற்கும் எஞ்சிய 6 சதவீதம் ஆசியாவிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளமையைக் காட்டுகின்றது. முதலீட்டாளர் வகைப்படி 5 ஆண்டுகால தொகையினைப் போன்றே அதாவது 92 சதவீதம் நிதிய முகாமையாளர்களுக்கும் 5 சதவீதம் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியத்திற்கும் 2 சதவீதத்தினை வங்கிகளும் 1 சதவீதத்தினை தனியார் வங்கிகளும் கொண்டிருந்தன.

குறிப்பு:

இப்பத்திரிகை வெளியீடு ஐக்கிய அமெரிக்காவில் விற்பனை செய்வதற்கான பிணையங்கள் தொடர்பிலான முன்வைப்பல்ல. இங்கே குறிப்பிடப்பட்ட பிணைகள் திருத்தப்பட்டவாறான, 1933ஆம் ஆண்டின் ஐக்கிய அமெரிக்கப் பிணையங்கள் சட்டம் “(பிணையங்கள் சட்டம்)” அல்லது ஐக்கிய அமெரிக்காவின் ஏதேனும் மாநில அரசின் பிணையங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பதிவு செய்யப்படவும் மாட்டாதென்பதுடன் பதிவின்றி அல்லது ஏற்புடைத்தான விதிவிலக்கல்களின்றி அல்லது கொடுக்கல்வாங்கலொன்றிற்குட்படாது பிணையங்கள் சட்டம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஏற்புடைத்தான மாநில பிணையங்கள் சட்டத்தின் கீழ் ஐக்கிய அமெரிக்காவில் முன்வைக்கப்படவோ அல்லது விற்கப்படவோ முடியாது. ஐக்கிய அமெரிக்காவில் பிணையங்கள் தொடர்பில் ஏதேனும் பகிரங்க வழங்கல்களை மேற்கொள்ள வேண்டுமாயின் வழங்குநரிடமிருந்து பெறப்பட வேண்டிய முன்விபரணங்களின் மூலமே மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் அது வழங்குநர் பற்றிய விபரமான தகவல்களையும் கொண்டிருத்தல் வேண்டும். இப்பத்திரிகை வெளியீடு, சட்ட ரீதியற்றதாக இருக்கும் எந்தவொரு நியாயாதிக்கப் பகுதியிலும் அவற்றை வழங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ உரிய விதத்தில் விற்பதற்கான முன்வைப்பொன்றினையோ அல்லது பிணையங்களை வாங்குவதற்கானதொரு முன்வைப்பினையோ கொண்டிருக்கவில்லை. தரமிடலானது பிணையங்களை விற்பதற்கு, வாங்குவதற்கு அல்லது உடமையில் வைத்திருப்பதற்கானதொரு விதந்துரைப்பல்ல என்பதுடன் அது எந்தவொரு நேரத்திலும் தரமிடல் முகவரினால் இடைநிறுத்தப்படுவதற்கும் அல்லது குறைக்கப்படுவதற்கும் அல்லது புறக்கீடு செய்யப்படுவதற்கும் உட்பட்டதாகும்.